# நிதி நிலை முடிவுகள்

இந்திய நிறுவனங்கள் நிதி நிலை முடிவுகளை வெளியிட்டு வருகின்றன. முன்னணி நிறுவனங்களின் வருவாய் மற்றும் லாப வளர்ச்சி பற்றிய புள்ளிவிவரங்கள் வருமாறு:-

## சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட்

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு பைனான்ஸ் கம்பெனி, டிசம்பர் மாதத்துடன் நிறைவடைந்த மூன்றாவது காலாண்டில் ரூ.249 கோடியை நிகர லாபமாக ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.163 கோடியாக இருந்தது. ஆக, நிகர லாபம் 53 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது.

இதே காலத்தில் இந்நிறுவனத்தின் மொத்த செயல்பாட்டு வருவாய் 18 சதவீதம் உயர்ந்து (ரூ.1,176 கோடியில் இருந்து) ரூ.1,383 கோடியாக அதிகரித்துள்ளது. பட்டுவாடா செய்த தொகை 55 சதவீதம் வளர்ச்சி கண்டு (ரூ.4,373 கோடியில் இருந்து) ரூ.6,761 கோடியாக உயர்ந்துள்ளது. மொத்த வாராக் கடன் 3.7 சதவீதமாக குறைந்துள்ளது. இரண்டாவது காலாண்டில் 4.46 சதவீதமாகவும், முதல் காலாண்டில் 4.73 சதவீதமாகவும் அது இருந்தது.

இந் நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு, நடப்பு நிதி ஆண்டிற்கு, பங்கு ஒன்றிற்கு ரூ.4.50 இடைக்கால டிவிடெண்டு அறிவித்துள்ளது.



## இன்டலெக்ட் டிசைன் எரினா

இன்டலெக்ட் டிசைன் எரினா நிறுவனம், நடப்பு நிதி ஆண்டின் மூன்றாவது காலாண்டில் (அக்டோபர்-டிசம்பர்) ரூ.12 கோடியை நிகர லாபமாக ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் இந்நிறுவனத்திற்கு ரூ.16 நிகர இழப்பு ஏற்பட்டிருந்தது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் வருவாய் 19 சதவீதம் அதிகரித்து (ரூ.226 கோடியில் இருந்து) ரூ.270 கோடியாக உயர்ந்துள்ளது.

இந்நிறுவனம், 2017 காலண்டர் ஆண்டில் ரூ.1,031 கோடி வருவாய் ஈட்டி உள்ளது. 2014-ஆம் ஆண்டில் அது ரூ.577 கோடியாக இருந்தது.

## இந்தியன் மெட்டல்ஸ்

இந்தியன் மெட்டல்ஸ் அண்டு பெர்ரோ அலாய்ஸ் (ஐ.எம்.எப்.ஏ) நிறுவனம், நடப்பு நிதி ஆண்டின் மூன்றாவது காலாண்டில் (அக்டோபர்-டிசம்பர்) ரூ.75 கோடியை நிகர லாபமாக ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.64 கோடியாக இருந்தது. ஆக, லாபம் 17 சதவீதம் உயர்ந்துள்ளது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் வருவாய் 5 சதவீதம் உயர்ந்து (ரூ.462 கோடியில் இருந்து) ரூ.484 கோடியாக அதிகரித்துள்ளது.

நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், இந்நிறுவனத்தின் நிகர லாபம் இரண்டு மடங்குக்கு மேல் உயர்ந்து (ரூ.76 கோடியில் இருந்து) ரூ.182 கோடியாக அதிகரித்துள்ளது. வருவாய் 20 சதவீதம் வளர்ச்சி கண்டு ரூ.1,326 கோடியாக உயர்ந்துள்ளது. ஏற்றுமதி (ரூ.925 கோடியில் இருந்து) ரூ.1,128 கோடியாக அதிகரித்துள்ளது.

## அலெம்பிக் பார்மா

அலெம்பிக் பார்மா நிறுவனம், டிசம்பர் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில் ரூ.130 கோடியை நிகர லாபமாக ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும் போது 52 சதவீத வளர்ச்சியாகும். இதே காலத்தில் இந்நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிகர வருவாய் 8 சதவீதம் உயர்ந்து ரூ.840 கோடியாக அதிகரித்துள்ளது.

## அசோக் லேலண்டு

அசோக் லேலண்டு நிறுவனம், மூன்றாவது காலாண்டில் (அக்டோபர்-டிசம்பர்) ரூ.450 கோடி நிகர லாபம் ஈட்டி இருக்கிறது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.162 கோடியாக இருந்தது. ஆக, லாபம் ஏறக்குறைய 3 மடங்கு உயர்ந்துள்ளது.

இதே காலத்தில் இந்நிறுவனத்தின் வருவாய் 58 சதவீதம் வளர்ச்சி கண்டு ரூ.7,113 கோடியாக அதிகரித்து இருக்கிறது. மொத்த லாபம் (ரூ.454 கோடியில் இருந்து) ரூ.788 கோடியாக உயர்ந்துள்ளது.

நடப்பு நிதி ஆண்டின் முதல் 9 மாதங்களில் (2017 ஏப்ரல்-டிசம்பர்) அசோக் லேலண்டு நிறுவனம் ரூ.895 கோடி நிகர லாபம் ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் அது ரூ.747 கோடியாக இருந்தது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் வருவாய் 30 சதவீதம் அதிகரித்து ரூ.17,398 கோடியாக உள்ளது.

## பஜாஜ் பின்செர்வ்

பஜாஜ் பின்செர்வ் நிறுவனம், அக்டோபர்-டிசம்பர் காலாண்டில், ஒட்டுமொத்த அளவில் ரூ.749 கோடி நிகர லாபம் ஈட்டி இருக்கிறது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.614 கோடியாக இருந்தது. ஆக, லாபம் 22 சதவீதம் உயர்ந்துள்ளது.

இதே காலத்தில் இந்நிறுவனத்தின் தனிப்பட்ட லாபம் 38 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. வட்டி வருவாய் 38 சதவீதம் வளர்ச்சி கண்டு ரூ.2,372 கோடியாக அதிகரித்து இருக்கிறது. நிகர வாராக் கடன் (0.39 சதவீதத்தில் இருந்து) 0.53 சதவீதமாக உயர்ந்துள்ளது.

2017 டிசம்பர் நிலவரப்படி இந்நிறுவனம் வழங்கி உள்ள கடன் 35 சதவீதம் அதிகரித்து ரூ.73,069 கோடியாக உள்ளது.

## கோத்ரேஜ் பிராப்பர்ட்டீஸ்

கோத்ரேஜ் பிராப்பர்ட்டீஸ் நிறுவனம், டிசம்பர் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில் ரூ.26 கோடி நிகர லாபம் ஈட்டி இருக்கிறது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.77 கோடியாக இருந்தது. ஆக, லாபம் 66 சதவீதம் சரிவடைந்துள்ளது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் மொத்த வருவாய் 22 சதவீதம் வளர்ச்சி கண்டு ரூ.674 கோடியாக அதிகரித்து இருக்கிறது.

## எம்.ஆர்.பி.எல்.

எம்.ஆர்.பி.எல். நிறுவனம், அக்டோபர்-டிசம்பர் காலாண்டில் ரூ.970 கோடி நிகர லாபம் ஈட்டி இருக்கிறது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.567 கோடியாக இருந்தது. ஆக, லாபம் 71 சதவீதம் உயர்ந்துள்ளது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் வருவாய் (ஏற்றுமதி உள்பட) ரூ.17,417 கோடியாக அதிகரித்து இருக்கிறது.